# ஊழியர் உலகம்

Volume: 17 | Issue: 02 | April 2026 | Mohan C. Lazarus | Annual Subscription: ₹ 100 | Single Copy: ₹ 10


JESUS REDEEMS MINISTRIES



என் ஜனத்தின் கண்ணீரையும், வேதனையையும்
துடைக்க உனக்கு வேண்டும்

# தாகம்

## உள்ளே...


4 சொன்னபடியே தலைதூக்க விடவில்லை

14 தாகம்!

24 அழுத்தத்தின் கீழ்!

31 கடைசி கால அடையாளங்கள்


# வாலிபர் உலகம்

வாலிபர்களே! உங்கள் ஆவிக்குரிய வாழ்வில் புதிய விழிப்புணர்வையும் மாற்றத்தையும் உருவாக்கும் இந்தப் பத்திரிகையை ஒவ்வொரு மாதமும் முழுமையாக வாசித்து, உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்க கொடுங்கள்.




₹100 ஆண்டு சந்தா

₹1000 ஆயுள் சந்தா

இப்பத்திரிகையைப் பற்றிய உங்கள் கருத்துகள் மற்றும் உங்களுக்கு மிகவும் பயனளித்த பகுதிகளை அவற்றின் தெளிவான பக்க எண்களோடுத் தெரிவிக்க, கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள்.

Scan ME

JESUS REDEEMS MINISTRIES

இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com

# தலைவாசல்

என்க்கன்பான வாலிப உள்ளங்களுக்கு,
இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் என்னுடைய
ஈஸ்டர் தின நல்வாழ்த்துக்கள்!

வாலிபர்களாகிய நீங்கள் தேவன் பயன்படுத்தும் பாத்திரங்கள். ஒவ்வொரு நாளும் தேவன் உங்களைப் பயன்படுத்துவதைப் பார்த்துக் கர்த்தருக்குள் மகிழ்ச்சி அடைகிறேன். வரும் நாட்களில் தேவன் இன்னும் அதிகமாக உங்களைப் பெலப்படுத்தி, வல்லமைப்படுத்தி பயன்படுத்த விரும்புகிறார். காரணம் இயேசுவை அறியாத திரள் கூட்ட வாலிபர்கள் தங்கள் வாழ்க்கையில் விடுதலை கிடைக்குமா, பாவப் போராட்டம் மாறுமா என்ற வேதனையோடும் கண்ணீரோடும் இருக்கிறார்கள். மேலும் இயேசுவை அறிந்த கிறிஸ்தவ வாலிபர்கள் இரட்சிப்பின் அனுபவம் இல்லாமல் பெயர் கிறிஸ்தவர்களாக வாழ்ந்து, பல போராட்டங்களில் சிக்கித் தவிக்கிறார்கள். இப்படிப்பட்ட வாலிபக் கூட்டத்தை யார் தேடி போவது?



இதேபோல் வேதத்தில் தன் வாழ்க்கையில் தோல்வி, விரக்தி, பாவ அடிமைத்தனம், கண்ணீர் போன்ற பல வேதனையோடு சமாரியா நாட்டில் உள்ள சீகார் என்னும் ஊரில் யாக்கோபுடைய கிணற்றண்டையில் ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்ள வந்தாள். இயேசு அந்த ஒரு ஆத்துமாவை தேடிச்சென்று, அவள் கண்ணீரைத் துடைத்து, அவள் வேதனையை மாற்றிப் பாவத்திலிருந்து விடுதலைக் கொடுத்துத் தாகத்தால் வறண்டு போய் இருந்த வாழ்க்கையில், ஜீவத்தண்ணீராகிய வார்த்தையைத் தந்து, அவளை உயிர்ப்பித்தார்.

இன்றைக்கும் தாகத்தோடும் ஏக்கத்தோடும் தங்கள் பாவம் மற்றும் சாபத்திலிருந்து விடுதலைக்காக ஒரு கூட்ட வாலிபர்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய வல்லமையையும் வரத்தையும் பெற்ற IGNITERS ஆகிய நீங்கள் தீவிரமாய் செயல்பட்டு,
தேவனை அவர்களுக்கு நிரூபித்துக் காண்பிக்க வேண்டும்.

- நீங்கள் ஜெபித்தால் தேவன் அந்த வாலிபர்களின், பாவ அடிமைத்தனத்தின் சங்கிலியை முறிப்பார்.
- நீங்கள் ஜெபித்தால், வியாதியின் கூறை தேவன் உடைப்பார்.
- நீங்கள் ஜெபித்தால், வாலிபர்களை மயக்கிவைத்திருக்கும் அசுத்த ஆவிகளின் கிரியைகளை அழிப்பார்.



உங்களுடைய ஜெபம் பெரிய மாற்றத்தையும் விடுதலையையும் கொண்டுவரும். கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பெலப்பட்டு செயல்படுங்கள்!

தேவ கிருபை உங்களோடு இருப்பதாக!!

கிறிஸ்துவின் பணியில்
**மோகன் சி. லாசரஸ்**

# சொன்னபடியே தலைகுனிய விடவில்லை!



சாட்சி: தொகுப்பு வில்லியம்

தமிழ்நாட்டின் தென்பகுதியான தென்காசி மாவட்டத்தில் மருத்துவ குடும்பத்தில் பிறந்து, தானும் மருத்துவம் படிக்க வேண்டும் என்ற ஆசையோடு இருந்த இர்வின் ஜோவாஷ், ஞாபக மறதி மற்றும் Fits வியாதியால் பாதிக்கப்பட்ட சூழ்நிலையிலும் மாநில கல்வி முறையில் படித்து, முதல் முறை நீட் தேர்வு எழுதி வெற்றி பெற்று வருங்கால மருத்துவராகப் பயிற்சி பெற்று வருகிறார். அவர்கள் வாழ்க்கையில் நடந்த மாற்றத்தை அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வோமா?

## உங்களது குடும்பம் மற்றும் சிறுபிராயம் பற்றிச் சொல்லுங்களேன்?

நான் தென்காசியில் டாக்டர் மேஷாக் பீட்டர், டாக்டர் ஷீபா மேக்டலின் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தேன். என் பெற்றோர் இருவரும் மருத்துவராகப் பணி புரிகின்றனர். எனது அக்கா MBBS இறுதி ஆண்டு படித்து வருகிறாள். நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்ததால், சிறு வயது முதல் இயேசுவை பற்றிக் கொஞ்சம் கொஞ்சமாக அறிந்து கொண்டேன். தவறாமல் ஆலயத்திற்கு செல்வேன், வேதத்தைப் படித்து வேதாகம தேர்வுகளில் பரிசுகளும் பெற்றிருக்கிறேன். பக்தியுடன் வளர்க்கப்பட்டேன். சிறு வயது முதல் பாடல் பாடுவது, கீபோர்டு மற்றும் கிட்டார் வாசித்தல் போன்ற தாலந்துகளை ஆண்டவர் கொடுத்திருந்தார். அதை ஆண்டவருடைய நாமத்தின் மகிமைக்காகப் பயன்படுத்த என் பெற்றோரால் வழிநடத்தப்பட்டேன்.





## ஓகே... அப்படியானால் நீங்கள் இயேசுவை அதிகமாய் நேசித்து ஆண்டவருக்காக வைராக்கியமாக வாழ்ந்திருப்பீர்களே?

அதுதான் இல்லை, என் பெற்றோரின் கண்டிப்பினால் அவர்கள் சொல்வதை செய்து வந்தேன். தவறாமல் சபைக்குச் சென்று வந்தாலும் எனக்கும் ஆண்டவருக்கும் தனிப்பட்ட முறையில் எந்த உறவும் இல்லை. கெட்ட நண்பர்கள், பாவ பழக்கங்கள் போன்ற காரியங்கள் என் வாழ்வில் இல்லாததால், நான் ஒரு நல்ல கிறிஸ்தவன் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். இரட்சிப்பின் அனுபவம் என்றால் என்னவென்றே தெரியாது. கொரோனா காலத்தில் ''ஜெபிக்கலாம் வாங்க'' நிகழ்ச்சியின் மூலம் இரட்சிப்பு எல்லாருக்கும் தேவை என்பதை மோகன் அங்கிள் மூலமாகக் கேள்விப்பட்டு, நான் தனிப்பட்ட முறையில் கிறிஸ்துவை ருசித்து, மனந்திரும்பி இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டேன். அதற்குப் பிறகு தான், நான் உண்மையாக ஜெபிக்கவும் வேதம் வாசிக்கவும் ஆரம்பித்தேன்.




### சூப்பர்... இயேசுவை அறிந்து கொண்டீர்கள்... உங்களுடைய படிப்புபற்றிச் சொல்லுங்களேன்?

நான் சிறு வயது முதல் ஆண்டவருடைய கிருபையால் பள்ளியில் நல்ல மதிப்பெண்கள் எடுத்து, என் வகுப்பில் முதல் மாணவனாக இருக்கும்படி தேவன் உயர்த்தி வைத்தார். பத்தாம் வகுப்பு பொதுத் தேர்விற்குப் பிறகு மருத்துவராக வேண்டும் என்ற எண்ணம் இருந்ததால், **Bio. Comp.**, குரூப் எடுத்தேன். 11 & 12ஆம் வகுப்புகள் படிக்கும்போது, நீட் தேர்வுக்கும், என் பள்ளியின் தேர்வுகளுக்கும் சேர்த்து படிப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டேன். எப்படி நேரத்தைச் செலவிட வேண்டும்? எவ்வளவு நேரம் எந்தப் பாடத்திற்கு ஒதுக்க வேண்டும்? என்று மிகவும் குழப்பம் அடைந்தேன்.



அதுமட்டுமல்லாமல் எனக்கு **Fits** வியாதியும் இருந்ததால், தினமும் மாத்திரை சாப்பிட்டு வந்தேன். அதனால் எனக்கு ரொம்ப தூக்கம் வரும், ரொம்ப நேரம் விழித்திருக்க முடியாது. அதற்காக ஜெபித்தேன். ஆண்டவருடைய கிருபையால் 12ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும்போது மாத்திரையை நிறுத்தினேன். இப்பொழுது எந்தப் பிரச்சனையும் இல்லை. நன்றாக இருக்கிறேன். ஆனால் நான் மிகவும் ஞாபக சக்தி குறைந்தவனாக இருந்தேன். பல **Facts**ஐ அப்படியே ஞாபகம் வைப்பது மிகவும் கடினமாக இருந்தது. பலமுறை பெயர்கள், எண்களை மனப்பாடம் செய்து படித்தாலும் மறந்து விடுவேன். ஆனால் ஆண்டவரிடம், ''எப்படியாவது முதல் முறை நீட் எழுதும்போதே அரசு கல்லூரியில் சீட் கிடைக்க வேண்டும்'', 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு மதிப்பெண் குறைந்தாலும் பரவாயில்லை'' என்று ஆண்டவரிடம் ஜெபித்து வந்தேன்.

### சரி... இவ்வளவு பிரச்சனையின் மத்தியில் நீங்கள் ஆசைப்பட்ட மருத்துவ படிப்புப் படிக்க முடிந்ததா?

2025ஆம் ஆண்டு ஜெபமலை **Achievers** கூடுகையில் ஜெப நேரத்தில் ''ஆண்டவர் உங்களைத் தலைகுனிய விடமாட்டார்'' என்ற வார்த்தையைச் சகோதரர் மூலமாகப் பேசினார். என் அம்மா அந்த வார்த்தையைப் பிடித்து ஜெபிக்க ஆரம்பித்தார்கள். சாலமோன் கேட்ட ஞானத்தோடு கேளாத ஐஸ்வர்யத்தையும் கொடுத்தது போல, என் தேவன் நான் விரும்பிக் கேட்ட மதிப்பெண்ணையும், பெரிதாகக் கேட்காத 12ம் வகுப்பு மதிப்பெண்ணையும் சேர்த்துக் கொடுத்தார். ஆண்டவருடைய கிருபையால் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் **593/600** மதிப்பெண்கள் பெற்று **School First** வந்தேன். **Physics** மற்றும் **Computer Science**ல் **centum** எடுத்தேன். **Neet** தேர்வில் **522/720** மதிப்பெண்கள் எடுத்து அரசு கல்லூரியில் சீட் கிடைக்க ஆண்டவர் உதவினார். நான் இப்போது தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரியில் படித்து வருகிறேன்.

மாநில கல்வி முறையில் பயில்வோர் **Neet** எழுத முடியாது, அவர்கள் வெற்றி பெற முடியாது. அப்படியே







# கர்த்தர் உங்களைத் தலைகுனிய விடமாட்டார்!

வெற்றி பெற்றாலும் முதல் முறை எழுதும்போது நீட் clear பண்ண முடியாது என்று அநேகர் எதிர்மறையான வார்த்தைகளைப் பேசிப் பயமுறுத்தினார்கள். ஆனால் நான் ஆண்டவரிடம், ''இன்னொரு வருடம் நான் படிக்கமாட்டேன், நீங்க எனக்கு முதல் முறையே சீட் தர வேண்டும்'' என்று ஜெபித்து வந்தேன். நான் கேட்டபடி தேவன் எனக்குச் செய்து என்னை மகிழச் செய்தார்.

**சூப்பர்... நீங்கள் விரும்பியதை பெற்றுக் கொண்டீர்கள்... இன்றைக்கு தேர்வு எழுதி மேற்படிப்பு படிக்க ஆயத்தமாக இருக்கும் மாணவர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

முதலாவது தேவனுக்கு கொடுக்க வேண்டிய நேரத்தையும் கனத்தையும் கொடுக்க வேண்டும். Special class என்று சொல்லி ஜெப நேரத்தையும், ஆலயம் செல்வதையும் குறைத்து விடக் கூடாது. படிக்க வேண்டிய நேரத்தில் TV Social Media போன்றவற்றில் நேரத்தை வீண் செய்யக் கூடாது. ஜெபத்தோடு கடினமாக முயற்சி செய்து படிக்கும்போது கர்த்தர் நிச்சயமாக நாம் எதிர்பார்ப்பதையும் விட மேலான வெற்றியைத் தருவார்.

**அன்பான மாணவ, மாணவியர்களே, இன்றைக்கு தேர்வு முடிவை எதிர்நோக்கி காத்திருக்கும் நீங்களும், மருத்துவம் படிக்க வேண்டும் என்ற கனவோடு இருக்கிறீர்களா? இயேசுவுக்கு முதலிடம் கொடுத்துப் படியுங்கள். கர்த்தர் உங்களுக்கும் உதவி செய்வார்!**



பதிர் : ரெபேக்கா

# வேதாகம புதையல் வேட்டை

**கீழ்கொடுக்கப்பட்டுள்ள Emojiயில் (சிறுபடங்கள்) மறைந்திருக்கும் பைபிள் கதாபாத்திரங்களை கண்டுபிடித்து அவர்கள் குணாதிசயங்களை வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.**







**கடந்த மாத வெற்றியாளர்**

**அனுஷியா, நாகர்கோயில்**

அவர்களை வாழ்த்துகிறோம்.

BIBLE Treasure Hunt

**பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.04.2026**

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

## கடந்த மாத விடைகள்

மீகாள் (1சாமு.25:44)
அக்சாள் (யோசு. 15:16)
ஆதாள் (ஆதி.36:4)
சில்லாள் (ஆதி.4:19)
நாமாள் (ஆதி.4:22)
மில்காள் (எண். 26:33)
இஸ்காள் (ஆதி.11:29)
ரேயுமாள் (ஆதி.22:24)
கேத்தூராள் (ஆதி.25:1)
தீனாள் (ஆதி. 30:21)
லேயாள் (ஆதி. 29:16)
சிப்பிராள் (யாத் 1:15)
தெபொராள் (ஆதி.35:8)
அன்னாள் (1 சாமு. 1:2)
ஏவாள் (ஆதி.3:20)

பத்சேபாள் (2 சாமு. 11:3-5)
சாராள் (எண் 26:46)
அகோலிபாமாள் (ஆதி. 36:5)
திம்னாள் (ஆதி 36:12)
பூவாள் (யாத் 1:15)
எலிசபாள் (யாத் 6:23)
மக்லாள் (எண் 26:33)
நோவாள் (எண் 26:33)
ஒக்லாள் (எண் 26:33)
திர்சாள் (எண் 26:33)
தெலிலாள் (நியா.16:4)
ஓர்பாள் (ரூத் 1:4)
ரெபெக்காள் (ஆதி. 24:15)
சில்பாள் (ஆதி.29:24)
பில்காள் (ஆதி. 29:29)

**சரியான விடைகளுக்கும் ஒரு வருடத்து பரிசு உண்டு**



ஆலோசனை: அவி

Heart Beat

# Plan பண்ணும் Parents!!

நான் பத்தாம் வகுப்பு படித்து வருகிறேன். நல்ல **mark** எடுத்து, 11ஆம் வகுப்பில் எனக்குப் பிடித்த **Computer Science Group** எடுக்க வேண்டும், **College**-ல் **BSC Computer Science Department**-ல் சேர்ந்து ஒரு **IT** கம்பெனியில் **Join** பண்ண வேண்டும், மேலும் **Data Science** படிக்க வேண்டும் என இப்படி பல ஆசை, இலட்சியம் எனக்குள் இருக்கிறது. **10th Exam** முடிந்தவுடன் கொஞ்ச நாள் ஜாலியாக இருக்கலாம் என்று யோசித்தால், **May Month** முழுவதும் **VBS** போகணும், முதலாவது ஆண்டவரோடு உள்ள உறவில் பெலப்படணும், இயேசுவோடு ஒரு **Encounter** உனக்கு உண்டாக வேண்டும் என்று சொல்கிறார்கள். இதைக் கேட்டவுடன், எரிச்சலும் கோபமுமாக வருகிறது. இதனால் எப்பொழுதும் சண்டையாகவே இருக்கிறது. என் அப்பாவிடம் நான் பேசுவதில்லை. எப்பொழுதும் நான் அறைக்குள் அமர்ந்து கொண்டு இருக்கிறேன். ஏன் என் பெற்றோரால் என்னைப் புரிந்து கொள்ள முடியவில்லை? எப்பொழுதும் அவர்கள் சொல்வதை நான் கேட்க வேண்டுமா? ஏன் என் **plan**-ஐ அவர்கள் கேட்கக் கூடாதா? – **ஆகாஷ், திருச்சி.**

அன்பு தம்பி ஆகாஷ், உங்களுடைய இலட்சிய கனவை எண்ணி சந்தோஷப்படுகிறேன். காரணம், +2 முடித்தும் என்ன செய்ய வேண்டும் என்று தெரியாமல், திட்டமே இல்லாமல் மனம் போன போக்கில் இருக்கும் மாணவர்கள் மத்தியில், +1ல் என்ன குரூப் எடுக்க வேண்டும்? என்ன டிகிரி படிக்க வேண்டும்? இப்போது **Trend**ல் என்ன **Course** இருக்கிறது என்பதை நன்கு அறிந்து படிக்கத் திட்டமிட்டிருக்கிறதை எண்ணி உங்களைப் பாராட்டுகிறேன்.

**VBS** போக வேண்டும் என்ற பெற்றோரின் கட்டளையால், அது **May month leave plan**ஐ காலி செய்துவிட்டதே என்ற வருத்தத்தில் உள்ளீர்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.

இன்றைக்கும் பல குடும்பத்தில் பெற்றோர் பிள்ளைகள் மத்தியில் ஏற்படும் பிரச்சனை, பிளவு, பிரிவு, அனைத்திற்கும் காரணம், **“seeing the one side of the coin.”** நாம் மறுபக்கத்தை பார்க்கத் தவறுவதால் தான். அவர்களுடைய எதிர்பார்ப்புத் தான் என்ன என்று முதலில் கேட்போம்; பிறகு பின்பற்றுவதை யோசிப்போம்.



### ஒரு கிறிஸ்தவ பெற்றோரின் எதிர்பார்ப்பு (Why does an encounter with Jesus matter so much?):


- என்னுடைய மகன் **Higher Secondary** போவதற்கு முன் ஆண்டவரோடு அவனுக்கு ஒரு ஐக்கியம் உண்டாக வேண்டும்.
- அவனைக் குறித்து தேவன் என்ன சித்தம் வைத்திருக்கிறார் என்பதை அவன் உணர வேண்டும்;
- இந்த உலகத்தில், படிப்பில் வெற்றியாகவும் வாழ்க்கையில் ஒழுக்கமாகவும் வாழ வேண்டும் என்றால், அவனுக்கு ஒரு ஆவிக்குரிய பெலன் வேண்டும் (அந்தப் பெலன், அனுதினமும் தேவனோடு பழகும்போது மட்டும் தான் கிடைக்கும்);
- தன்னுடைய இருதயத்தை காத்துக் கொள்ளவும், பாவத்திற்கு விலகி வாழும் பழக்கமும் அவனுக்கு வந்து விட்டால், அவன் வெற்றியுள்ள ஒரு கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடியும்.
- தேவன் அவனுக்காக வைத்திருக்கும் அந்த சிறந்த வாழ்க்கையை அவன் அடைந்து, ஆண்டவருக்கு மகிமையாகவும் சாட்சியாகவும் வாழ முடியும்.



### ஆகாஷ், நீங்கள் என்ன யோசிக்கிறீர்கள் என்றால்:

- என் வாழ்க்கை எனக்கு வாழ தெரியாதா? எனக்கு இயேசப்பா அறிவு தந்திருக்கிறார்; எதை செய்யணும், செய்யக்கூடாது என்று எனக்கு தெரியும்;
- **"I have the will power; I will overcome every temptation in my 11th, 12th & college life"** அதனால் எனக்கு பிரச்சனை இல்லை; என்னால் என்னுடைய **goal**-ஐ **easy**-ஆ **achieve** பண்ண முடியும் என்று யோசிக்கிறீர்கள்.
- ஆனால், இங்கேதான் அநேக வாலிபர்கள் தவறு செய்கிறார்கள். தங்களுடைய சொந்த பெலத்தில் சாதிக்கலாம் என்று யோசித்தும் முயற்சித்தும் தோற்றுப் போய், தேவ சித்தத்திலிருந்து விலகிப் போய் விடுகிறார்கள்.

**சிம்சோன்:** தன் மாம்ச பெலத்தில் சாதித்துவிடலாம் என்று யோசித்து, மாம்ச இச்சையை மேற்கொள்ள முடியாமல், விழுந்து போனான்.



**காயீன்:** தன் மாம்ச எண்ணத்திற்கு இடம் கொடுத்து, அவனுடைய எரிச்சல் கோபமாக மாறி, தன் சொந்த சகோதரனுக்கு விரோதமாய் எழும்பி, பாவம் செய்து, தேவ சமூகத்தை விட்டு விலகிப் போனான்.

**கேயாசி:** உலகப் பொருள்கள் மேல் ஆசைப்பட்டு, கனமான தீர்க்கதரிசன ஊழியத்தையே இழந்து போனான். தேவ சமூகத்தை விட்டு போய் விட்டான்.

யாரெல்லாம் தன் பெலத்தில் சாதிக்கலாம் என்று யோசித்தார்களோ, அனைவரும் விழுந்து தேவ சமூகத்தை விட்டே போய்விட்டார்கள்.

அதனால் தான் உங்கள் பெற்றோர், நீங்கள் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்ந்து, சிறந்து விளங்க தேவனோடு ஒரு உறவு தேவை என்று விரும்புகிறார்கள்.

எனவே, இந்த ஒரு முறை **VBS**க்கு சென்று மே மாதம் முழுவதும் உங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டு, படிப்பில் களம் இறங்குங்கள். தேவன் உங்களோடு இருந்து உங்களை பெலப்படுத்துவார் (சங்கீதம் 14:2,3).

தேவனை தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க, கர்த்தர் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரை கண்ணோக்கினார்.

**எல்லோரும் வழி விலகி, ஏகமாய் கெட்டுப் போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை; ஒருவனாகிலும் இல்லை.**

**நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார் (I கொரிந்தியர் 15:3-5).**

மரித்த இயேசுவின் சரீரத்தை யூதர்களின் வழக்கத்தின்படி, துணிகளால் சுற்றி, மலையிலே குடைந்து எடுக்கப்பட்ட கல்லறையில் அடக்கம்பண்ணினார்கள். அந்தக் குகையை (கல்லறையை) ஒரு கல்லினால் மூடி விட்டனர். இயேசு இந்த உலகத்தில் உலாவின நாட்களில், ''நான் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிரோடு எழுந்திருப்பேன்'' என்று சொன்னார். அவர் சொன்னபடியே மரணத்தை ஜெயித்து உயிரோடு எழுந்தார். **''இயேசு இங்கே இல்லை, உயிர்த்தெழுந்தார்''** என்ற ஒரு வார்த்தையுடன் எருசலேமில் இன்றைக்கும் இயேசுவை வைத்திந்த கல்லறை திறந்தே இருக்கிறது. உலகத்திலேயே, மரித்து அடக்கம்பண்ணப்பட்டு மரணத்தை ஜெயித்து இன்றைக்கும் உயிரோடு இருக்கிற ஒருவர் இயேசு கிறிஸ்து மாத்திரமே.

# தன்னை வெளிப்படுத்தும் உயிர்த்தெழுந்த இயேசு!!



இயேசுவோடு கூட இருந்த அப்போஸ்தலர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவை தரிசித்தவர்கள். **நீங்கள் அவரைச் சிலுவையில் அறைந்து கொலை செய்தீர்கள், தேவன் அவரை உயிரோடு எழுப்பினார் அதற்கு நாங்கள் சாட்சி** (அப். 2:32) என்று இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து சாட்சி கொடுத்தார்கள்.



செத்துப்போன ஒருவரை தெய்வமாக அறிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. மரித்தும் உயிரோடு இருக்கிறவர் தான், வானத்தையும் பூமியையும் உண்டாக்கின சர்வ வல்லமையுள்ள தேவன். இந்த உலகத்தில் அப்படிப்பட்ட ஒரே தெய்வம் இயேசு கிறிஸ்து மாத்திரமே. ஆகவே தான், **மரித்தேன் ஆனாலும் இதோ சதா காலங்களிலும் உயிரோடு இருக்கிறேன்** (வெளி. 1:18) என்பதாக இயேசு சொன்னார். மரணத்தை ஜெயித்த தெய்வம் இயேசு கிறிஸ்து மட்டுமே (1 கொரி. 15:14). இயேசு உயிர்த்தெழுந்தபிறகு அவருடைய சீஷர்களோடு வந்து கிரியை நடப்பித்தார். இயேசுவை

அறிவிக்கின்ற இடத்திலெல்லாம் அற்புதங்களைச் செய்து தான் உயிரோடிருக்கிறதை விளங்கப்பண்ணினார் (மாற்கு 16:20). இயேசு உயிரோடிருந்த நாட்களில் எப்படி அற்புதம் நடைபெற்றதோ அதேவிதமான அற்புதங்கள் அவருடைய சீஷர்களைக் கொண்டு அவர் செய்தார். எதற்காகச் சீஷர்களைக் கொண்டு செய்தார்? சீஷர்களை பெருமைப்படுத்துவதற்கு அல்ல; இவர்கள் பிரசங்கிக்கிற இயேசுவாகிய நான் உயிரோடு இருக்கிறேன் என்பதை விளங்கப் பண்ணுவதற்காக அற்புதங்களைச் செய்து தன்னை வெளிப்படுத்தினார்.

பஞ்சாப் மாநிலம் லூதியானா பட்டணத்தில் சீக்கிய குடும்பத்தில் பிறந்த சுந்தர் மிகவும் பக்தியுடன் வளர்க்கப்பட்டார். இவர் தாய் மத நம்பிக்கையில் மிகவும் பக்தியுள்ளவர்கள். இளமைப் பருவத்திலிருந்தே சுந்தர் இந்து மார்க்கத்தின் புனித நூல்களை, குறிப்பாகப் பகவத் கீதையை ஆழ்ந்து படித்தார். அவர் ஏழு வயதாக இருக்கும்போது அதை மனப்பாடம் செய்யவும் ஆரம்பித்தார். அவர் இளம் வயதாக இருக்கும்போது, தாயார் இறந்தது சுந்தர் உள்ளத்தை மிகவும் பாதித்தது. அதனால் தாயாரின் மரணத்திற்கு பிறகு ஆறுதலுக்காக அவர் உள்ளம் ஏங்கினபோது தன் தாய் காண்பித்துக் கொடுத்த கடவுள்களை தேட ஆரம்பித்தார். பலவிதமான மத புத்தகங்களை வாங்கி வாசித்து, எல்லா தெய்வத்தைக் குறித்தும் அறிந்து கொண்டு தேட ஆரம்பித்தார். ''இந்த முழு உலகத்தையும் சிருஷ்டித்த கடவுள் என்று ஒருவர் இருக்கிறார், அவரை நான் பார்க்க வேண்டும். அவர் யாராக இருந்தாலும் அவரைக் காண விரும்புகிறேன் அவர் மூலமாகத் தான் எனக்கு ஆறுதலும் சமாதானமும் கிடைக்கும்'' என்று பல மாதங்கள் வாஞ்சையோடு தேடினார். ஆனால் எதிலும் அவருக்குச் சமாதானம் கிடைக்கவில்லை. கடைசியாக ஒருநாள் இன்றைக்கு தான் கடைசி நாள், ''மெய்யான கடவுள் என்று ஒருவர் இருந்தால் இந்த இரவு என்னைச் சந்திக்கட்டும் அல்லது நான் சாகப்போகிறேன் என்று இரவு முழுவதும் காத்திருந்தார்.

மறுநாள் விடியும் முன்பே, அந்தக் கடைசி நிமிடத்தில், அவர் இருந்த அறையில் பிரகாசமான ஒரு வெளிச்சம் தோன்றியது.

அந்த வெளிச்சத்தில் ஆணிகள் கடாவப்பட்டு, சிலுவையில் தொங்கினவராய் தன்னை அவருக்கு வெளிப்படுத்தினார். ''சுந்தர், நீ தேடிக் கொண்டிருக்கிற, வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தெய்வம் நானே! உனக்காகச் சிலுவையில் மரித்து உன்னுடைய பாவங்களைச் சுமந்து தீர்த்தவர் நானே! என்று இயேசு தன்னை வெளிப்படுத்தினார். சுந்தர் இயேசுவை எதிர்பார்க்கவில்லை. இயேசுவை கண்டபோது அதிர்ச்சி அடைந்தார். இயேசுவை தரிசித்த சுந்தர் அங்கேயே தன்னை இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்தார்.

அதன்பிறகு திருமணம் செய்து கொள்ளாமலேயே சாது சுந்தர் சிங் என்ற பெயரில் இந்தியா மற்றும் உலகத்தின் பல நாடுகளுக்குச் சென்று ஊழியம் செய்து இயேசுவை அறிவித்த ஒரு தேவ மனிதராய் அவர் வாழ்ந்து தன் ஓட்டத்தை முடித்தார்.

**அன்பான வாலிப மகனே(ளே) சுந்தர் என்கிற வாலிபனின் உள்ளம் தெய்வத்தைக் குறித்த தாகத்தினால் நிறைந்திருந்தது. எப்படியாவது என்னை உண்டாக்கின தேவனை தரிசிக்க வேண்டும் என்பதில் தாகமாக இருந்ததினால் இயேசு தம்மை அவருக்கு வெளிப்படுத்தினார். இன்றைக்கும் தன்னை விசுவாசித்து தேடுகிற மக்களுக்குத் தன்னை வெளிப்படுத்த அவர் காத்துக் கொண்டிருக்கிறார். நீ இயேசுவை ஏற்றுக்கொள்ள தாகமாக இருக்கிறாயா?**





# வேதாகம களஞ்சியம்!!



அன்பான இளம் வாலிபர்களே! வேதாகமத்தின் பின்னணியை அறிந்து வேதத்தைப் படிப்பது உங்களுக்கு Useful-ஆ இருக்கும்னு நம்புகிறோம். இந்த மாதம் யோசுவா, நியாயாதிபதிகள், ரூத் புத்தகங்களின் பின்னணியை அறிந்துகொள்வோம்!

## கதை சுருக்கம்:

## யோசுவா:

1. மோசே மரித்தப்பின் யோசுவா தைரியமாக இஸ்ரவேல் ஜனங்களைக் கானானுக்குள் நடத்தி செல்கிறார்.

2. ''பலங்கொண்டு திடமானதாயிரு' என்று தேவன் யோசுவாவுக்கு கட்டளையிட்டு அவரை வழிநடத்துகிறார்.

3. யோர்தானைக் கடந்து கானானை இஸ்ரவேலர்கள் சுதந்தரிக்க துவங்கினார்கள்.

4. தேவனுடைய விசித்திரமான கட்டளைக்கு ஜனங்கள் தைரியமாகக் கீழ்படிந்ததினால், அசாதாரணமாக எரிகோவின் மதிலைத் தேவன் விழப்பண்ணினார்!

5. இந்த வெற்றி சுய பெலத்தால் அல்ல, தேவனால் வந்தது என்று யோசுவா ஜனங்களுக்கு நினைப்பூட்டுகிறார்.

## நியாயாதிபதிகள்:

இஸ்ரவேல் ஜனங்கள் தேவனை மறந்து, பலமுறை பாவம் செய்து தேவனுடைய தண்டனைகளை அனுபவிக்கிறார்கள். ஆனால், ஒவ்வொரு முறையும் அவர்கள் தேவனை நோக்கித் தங்கள் அடிமைத்தனத்திலிருந்து உதவிக்காய் கதறும்போது, தேவன் அவர்களை இரட்சிக்க ஒரு நியாயாதிபதியை ஏற்படுத்துகிறார். ஜனங்கள் சமாதானம் அடைவார்கள். தேவன், இனி ஜனங்கள் அவரது கட்டளைகளைக் காத்து, முழு இருதயத்தோடு தன்னை சேவிப்பார்கள் என்று நினைக்கும்போது இஸ்ரவேலர்கள் மீண்டும் விழுந்துபோவார்கள்.

முக்கிய நபர்கள்: தெபோராள், சிம்சோன், கிதியோன்.

## ரூத்:

ரூத் ஒரு மோவாபிய விதவை, அவள் தன் மாமியார் நகோமிக்கும், நகோமியின் தேவனுக்கும் விசுவாசமாயிருக்க தீர்மானித்து, தன் மாமியோடு பெத்லகேமுக்குச் சென்று வயல்களில் வேலை செய்து பிழைக்கிறாள். அங்கு அவள் போவாஸைச் சந்திக்கிறாள். அவன் அவளுடைய மீட்பராக மாறுகிறான். அதைவிட ஆச்சரியம் என்னவென்றால்,

வேத ஆராய்ச்சி : ஜோயல்

ரூத், தாவீது ராஜாவின் கொள்ளுப் பாட்டியாகிறாள். அமைதியான, சாதாரண சூழ்நிலைகளிலும், தேவன் எப்போதும் செயல்படுகிறார் என்பதை ரூத்தின் கதைக் காட்டுகிறது.

### நினைவிற்கு:

யோசுவா, நியாயாதிபதிகள் மற்றும் ரூத் ஆகியோர் விசுவாசத்தின் மூன்று யதார்த்தங்களைக் காட்டுகிறார்கள்

1. விசுவாசத்திற்கு தைரியம் தேவை.
2. தேவனை விட்டுப் பின்வாங்குதல் உபாத்திரவத்திற்கும், குழப்பத்திற்கும் வழிவகுக்கிறது.
3. விசுவாசம் மீட்பைக் கொண்டுவருகிறது.

நாம் தவறினாலும் தேவனை நம்புவோமானால், தேவன் தம் திட்டத்தைத் நம்மிலும், நம்மைக்கொண்டும் தொடருகிறார்.

ரூத் தன் விசுவாசத்தில் எடுத்த முடிவின் பலனாக அவளுடைய வம்சத்தில், தேவன் தாவீது ராஜாவுக்கும், இறுதியில் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் வழியை ஆயத்தம் செய்தார்!







முகப்பு செய்தி: சதீஷ்

# தாகம்!!

நமது சரீரம் ஆரோக்கியமாக இருக்க உணவும் தண்ணீரும் மிகவும் அவசியம். தாகம், பசி இரண்டும் சரீரத் தேவைகளுக்கான இயல்பான உணர்வுகள் ஆகும். தாகம் எடுக்கும்போது எப்படி தண்ணீரைத் தேடிப் போய்ப் பருகித் தாகத்தைத் தணித்துக் கொள்கிறோமோ, அதுபோலவே நம்முடைய ஆத்தும தாகத்தைத் தணிக்க தேவனைத் தேட வேண்டும்.



தாவீது இளம் வயதிலேயே தேவனைத் தேடினான். அவருடன் நெருங்கி உறவாட விரும்பினான். அவனுடைய ஆத்துமா மாத்திரமல்ல, அவனுடைய சரீரமும் தேவனை அறிந்து கொள்ள விரும்பியது. **"தேவனே நீர் என்னுடைய தேவன், அதிகாலமே உம்மைத் தேடுகிறேன், வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது, மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது"** (சங்கீதம் 63:1). ஆண்டவரைத் தேடுவதை ஒரு கடமையாகச் செய்யாமல், தாகத்தோடு அவரைத் தேடும்பொழுது நம் ஆத்தும தாகம் தணியும்.

நம்முடைய உடலுக்குத் தண்ணீர் எவ்வளவு அவசியமோ, அதைவிட அதிகமாகத் தேவனுடைய சமூகத்தில் இருப்பது அவசியம் என்பதை தாவீது நன்கு அறிந்திருந்தான். அதனால் தான் தாவீது அதிகாலையில் தேவனைத் தேடினான். எவ்வளவு சோதனைகள், போராட்டங்கள், நெருக்கங்கள், இழப்புகள் வந்தபோதும், தாவீது ஆண்டவரைத் தேடுவதை விட்டுவிடவில்லை. எல்லா சூழ்நிலையிலும் ஆண்டவரைத் தேடி அவர்மேல் நம்பிக்கையாய் இருந்தான். உங்கள் வாழ்விலும் எப்படிப்பட்ட சூழ்நிலை வந்தாலும், ஆண்டவரை தேடுவதை

விட்டுவிடாதிருங்கள். உங்களுடைய ஆத்துமாவும், சரீரமும் எவ்வளவு ஆண்டவரை தேடுகிறதோ, அவ்வளவு பெலனைப் பெறுவீர்கள்.

**"என் ஆத்துமா தேவன் மேல் ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமாயிருக்கிறது; நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்"** (சங்கீதம் 42: 2). எப்படி தாவீது ஒவ்வொரு நாளும் தேவன் மேல் தாகமாய் இருந்தாரோ, அதுபோலவே உங்கள் ஆத்துமாவும் தேவன் மேல் தாகமாய் இருக்கும்போது, இவ்வுலக வாழ்வில் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்வீர்கள்.



இயேசு இவ்வுலகில் வெற்றியாய் வாழக் காரணம்; அவர் அனுதினமும் தன் பிதாவைத் தேடி போனார். நீங்கள் இயேசுவைத் தேடும்பொழுது, அவருக்குள் இருக்கும் சுபாவங்கள் உங்களுக்குள் வெளிப்பட ஆரம்பிக்கும். அவர் அழிந்து போகும் ஆத்துமாக்களின் மேல் தாகம் உள்ளவராக இருந்ததுபோல் நீங்களும் ஆத்துமாக்கள் மேல் தாகமுள்ளவர்களாக இருப்பீர்கள்.

சமாரியர் யூதருக்கு வெறுப்பானவர்கள். யூதர்களால் வெறுக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்த சமாரியா பெண்ணின் ஆத்தும தாகத்தைத் தணிக்கும்படி இயேசு கிணற்றின் அருகே காத்திருந்தார். இயேசுவுக்கு சரீர தாகத்தை விட ஆத்தும தாகமே அதிகமாக இருந்தது. அவளும் தனது தாகத்தைத் தீர்க்கவே தண்ணீர் மொள்ள வந்திருந்தாள். ஆனால் இயேசுவோ அவளது வறண்ட ஆத்துமாவையும் வாஞ்சையுள்ள தாகத்தையும் கண்டார். அதைத் தீர்க்கத் தக்க ஜீவத் தண்ணீராகிய தன்னை அறிமுகப்படுத்தினார். தன் சரீர தாகத்தைத் தணிக்க வந்த அவளுக்கு, ஆண்டவர் அவளுடைய ஆத்தும தாகத்தைத் தணிக்கும் வழியைக் காண்பித்தார். **"நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்"** (யோவான் 4:14). கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவால் தாகம் தீர்க்கப்பட்ட சமாரியப் பெண் அவர்மேல் வைத்த அன்பினால், தன் ஊருக்குள் ஓடித் தன்னை கேவலமாய் எண்ணிய தன்னுடைய கிராமத்து மக்களை, இயேசுவை காணும்படி அழைத்து வந்தாள். ஓடோடிச் சென்று இயேசு அவளுக்குச் செய்ததை அறிவித்து அநேகரை மீட்புக்கு நேராக வழி நடத்தினாள். சமாரிய பெண் இயேசுவை முதலாவது யூதராகக் கண்டாள், பின்பு தீர்க்கதரிசியாகக் கண்டாள், இறுதியாகத் தன்னைப் பாவத்திலிருந்து மீட்க வந்த மேசியா என்பதை அறிந்து கொண்டாள்.

நான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்னார் என்று சாட்சி சொன்ன அந்த ஸ்திரீயுடைய வார்த்தையினிமித்தம், அந்த ஊரிலுள்ள சமாரியரில் அநேகர் அவர் மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள் (யோவான் 4:39).

**எனக்கன்பான வாலிபர்களே! இவ்வுலகம் ஆத்தும தாகத்தினால் வருந்திக் கொண்டிருக்கிறது. தேவன் நமக்குத் தந்த விலையேறப்பெற்ற பொக்கிஷம் அவருடைய குமாரனாகிய இயேசு மட்டுமே. நீங்கள் தினமும் ஒரு மணி நேரமாவது ஜெபம் பண்ணி, தேவனை தேடுவீர்களானால் அவர் உங்களோடு இருப்பார். நீங்களும் சமாரிய ஸ்திரீயைப் போல ஆத்தும தாகத்தோடு மற்றவர்களின் தாகம் தணிக்க புறப்பட்டு போங்கள்! இயேசு உங்களுக்கு செய்ததை சாட்சியாக சொல்லுங்கள்! கர்த்தர் உங்களோடிருந்து அநேகரின் தாகத்தைத் தணிப்பார்!!**

# என்ன படிக்கலாம்?

## 12 ஆம் வகுப்புக்குப் பிறகு...

**உயிரியல் (Biology) பிரிவு மாணவர்கள்:**

மருத்துவம் (MBBS, BDS, Paramedical), விவசாயம், பயோடெக்னாலஜி போன்ற படிப்புகளைத் தேர்வு செய்யலாம்.

**கணித (Maths) பிரிவு மாணவர்கள்:**

பொறியியல் (B.E./B.Tech), கணினி பயன்பாடு (BCA), கட்டிடக்கலை (B.Arch) போன்ற துறைகளில் சேரலாம்.

**கலை மற்றும் வணிகவியல் (Arts & Commerce) மாணவர்கள்:**

B.Com, BBA, சட்டம், ஊடகவியல், டிசைனிங் போன்ற பல்வேறு படிப்புகளில் முன்னேறலாம்.



## 12 ஆம் வகுப்புக்குப் பின் உள்ள முக்கிய படிப்பு வாய்ப்புகள்:

### 1. அறிவியல் பிரிவு (Science Stream – Biology / Maths)

**மருத்துவம் மற்றும் தொடர்புடைய துறைகள்:** MBBS, BDS, B.Pharm, Pharm D, Nursing, Physiotherapy, Forensic Science, Imaging Technology, Cardiovascular Technology, Optometry.

**பொறியியல் & தொழில்நுட்பம்:** B.E./B.Tech (CSE, AI, Robotics, Cyber Security, Mechanical, Civil), Architecture (B.Arch).

**அடிப்படை அறிவியல் (Core Science):** B.Sc (Physics, Chemistry, Mathematics, Biotechnology, Microbiology, Nutrition).

### 2. வணிகவியல் பிரிவு (Commerce Stream)

**தொழில்முறை படிப்புகள்:** Chartered Accountancy (CA), Cost and Management Accountant (CMA), Company Secretary (CS), ACCA.

**பட்டப்படிப்புகள்:** B.Com (General, Accounting & Finance, Computer Applications), BBA, BBM.

### 3. கலை மற்றும் அறிவியல் பிரிவு (Arts & Science Stream)

**BA படிப்புகள்:** English, History, Psychology, Political Science, Sociology, Tamil.

**கணினி & தொழில்நுட்பம்:** BCA, B.Sc Computer Science, Animation, Gaming, Digital Marketing.

**நிர்வாகம் & சட்டம்:** Law (BA LLB, BBA LLB, B.Com LLB), Hotel Management (BHM), Journalism & Mass Communication, Event Management, Fashion Designing, Fine Arts.

### 4. திறன் சார்ந்த குறுகிய காலப் படிப்புகள் (Short-Term Courses)

Digital Marketing, Data Entry, Animation, Web Designing, Aviation & Hospitality Management, Shipping & Logistics.



# களத்தில் IGNITERS



## Congratulation - Salem zone

கடந்த ஜனவரி பிப்ரவரி மாதங்களில் இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் மூலமாக Salem Zone Igniters அதிகமாகச் சுவிசேஷத்தை அறிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு எங்களுடைய பாராட்டுகளும், வாழ்த்துக்களும்! தேவன் உங்களை இன்னும் பெலப்படுத்தி பெரிய காரியங்களைச் செய்வாராக!!

இதே போல் IGNITERS ஆகிய நீங்களும் உங்கள் District மற்றும் zoneல் ஊழியம் செய்வதை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.
நாம் அனைவரும் இணைந்து தேவ இராஜ்யத்தைக் கட்டி எழுப்ப ஒவ்வொருவரையும் தேவன் பெலப்படுத்துவாராக!!

## REVIVAL IGNITERS Live

ஏப்ரல் 26
(ஞாயிற்றுக்கிழமை)

ஒவ்வொரு மாதமும் திறப்பின் வாசலுக்கு (கடைசி சனி) அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணி முதல் 5.30 மணி வரை, இயேசு விடுவிக்கிறார் சமூக வலைத்தளங்கள் {YouTube (Jesus Redeems Official & Youth Trendz) மற்றும் Facebook} .வழியாக நேரலையில் பார்க்கலாம்..






இந்த நிகழ்ச்சியை உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். அவர்களையும் இணைத்து, ஆவிக்குரிய புதுப்பொலிவை அனுபவிக்கச் செய்யுங்கள்.

# ACHIEVERS



கடந்த ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா மற்றும் மும்பையில் தேர்வு எழுதும் மாணவர்களுக்கான (Achievers) கூடுகை நடத்த தேவன் கிருபை செய்தார். தேர்வைக் குறித்த பயம், கலக்கம், அவநம்பிக்கை, தாழ்வுமனப்பான்மையோடு வந்த மாணவ மாணவியர்களை தேவன் புதுப்பெலத்தினால் நிரப்பி அனுப்பினார். நம்பிக்கை இழந்து வந்த ஒவ்வொருவரும் நம்பிக்கையோடு கடந்து சென்றனர். இக்கூடுகையில் சுமார் 2096 மாணவ மாணவியர் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள். தேவ ஊழியர்களைத் தேவன் வல்லமையாகப் பயன்படுத்தினார். தேவனுக்கே மகிமை!!





சிந்திக்க : ரோஸ்லின்

தாகம்!

## ஏசாயா தீர்க்கதரிசி தேவன் மீது கொண்டிருந்த தாகம்:

கர்த்தருடையவார்த்தையின் மேலும், அவருடைய நீதியின் மேலும், ஆழ்ந்த தாகம் கொண்டிருந்தார். “இஸ்ரவேலின் பரிசுத்தர்” என்று மீண்டும் மீண்டும் குறிப்பிடுவதன் மூலம், தேவன் மீது கொண்டிருந்த பயபக்தியுடனான தாகத்தை வெளிப்படுத்தினார். தேவன் உரைத்ததையே பேச வேண்டும் என்ற உறுதியான தீர்மானம் அவருக்கிருந்தது. ஜனங்கள் பாவத்தை விட்டுத் திரும்பி தேவனிடத்தில் சேர வேண்டும் என்ற தணியாத தாகத்துடன் ஏசாயா செயல்பட்டார்.



## எரேமியா தீர்க்கதரிசி தேவன் மீது கொண்டிருந்த தாகம்:

மக்கள் மனந்திரும்பி தேவனிடம் திரும்ப வேண்டும் என்ற ஆழ்ந்த தாகம் அவருக்கிருந்தது. சிறுவயதிலேயே கர்த்தரால் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், தேவன்மீது கொண்டிருந்த தீவிரமான தாகத்தினால் தீர்க்கதரிசியாக அழைக்கப்பட்டார். கர்த்தரே ஜீவனுள்ள மெய்யான தேவனும் நித்திய இராஜாவுமானவர் என்று உறுதியாக நம்பினார். மக்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும், கர்த்தரின் வார்த்தையைத் தைரியமாக அறிவித்தார்.

## எலியா தேவன் மீது வைத்திருந்த தாகம்:

இஸ்ரவேல் மக்கள் உண்மையான தேவனை விட்டு விலகியபோது, எலியா கர்த்தருக்காக வைராக்கியமாக நின்றார். தேவன் சொன்ன இடத்திற்குச் செல்லவும், காகங்கள் கொண்டு வந்த உணவை உண்ணவும் தயக்கமின்றி கீழ்ப்படிந்தார். மழைக்காக ஏழு முறை ஜெபித்தபோதும் நம்பிக்கையை இழக்காமல் கர்த்தரின் வாக்கை பற்றிக் கொண்டார். இந்தத் தாகமே, சத்துருக்களுக்கு முன்னிலும் தேவனை உயர்த்தும் தைரியத்தை அவருக்குத் தந்தது.

## தாவீது தேவன் மீது வைத்திருந்த தாகம்:



சவுலிடமிருந்து தப்பியோடிய காலங்களிலும், வனாந்தர வாழ்விலும் தன் முழு இருதயத்தோடு தேவனைத் தேடினார். தேவனுடைய சந்நிதியில் வாசம் செய்யவேண்டும் என்பதே அவரது தீராத தாகம். தன் ஆத்துமாவை தண்ணீருக்காக ஏங்கும் மானுக்கு ஒப்பிடுகிறார் (சங்கீதம் 63:1). தேவனுடைய ஆலயத்தில் எப்போதும் தங்கியிருப்பதே அவரது வாழ்க்கையின் மிகப்பெரிய விருப்பமாக இருந்தது.

## சமாரியா பெண் இயேசுவின் மேல் வைத்திருந்த தாகம்:

சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட அவள், மேசியாவைச் சந்தித்த தருணத்தில் வாழ்க்கையில் மாற்றம் பெற்றாள். தண்ணீர் குடத்தை விட்டுவிட்டு ஊருக்குள் சென்று இயேசுவைப் பற்றிய நற்செய்தியை அனைவருக்கும் அறிவித்தாள். தன் பழைய வாழ்க்கையை விட்டு மனந்திரும்பி, உண்மையான தெய்வீக அன்பிற்கும் நித்திய ஜீவனுக்கும் ஏங்கினாள். அந்தத் தாகமே அவளை ஒரு சுவிசேஷகியாக மாற்றி பலரை விசுவாசத்துக்குள் வழிநடத்தியது.

## சகேயு தேவனை அறிய கொண்டிருந்த தாகம்:

குள்ளமான உடல் அமைப்பில் மக்கள் கூட்டத்தில் இயேசுவைப் பார்க்க முடியாததால், அத்தி மரத்தில் ஏறினார். அவரது ஏக்கத்தை அறிந்த இயேசு "இறங்கி வா" என்று அழைத்தபோது, உடனே கீழிறங்கி மனந்திரும்பினார். தன் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கத் தயாரானார்; இது அவரது உண்மையான மனமாற்றத்தின் சாட்சி. பாவியான அவரை இரட்சித்து, அவரது இல்லத்திற்கே இயேசுவை வரவழைத்தது இந்தத் தாகமே.




சாதனை சுமா கிரேஷன்

# இருண்ட உலகத்தில் வெளிச்சம் கண்டவர்!

அன்பான இளம் சாதனையாளர்களே, உங்களுக்கு எனது இதயம் கனிந்த நல் வாழ்த்துகள்!

வாழ்க்கையில் எத்தனை தடைகள் வந்தாலும் இலக்கை விடாமல், குறிக்கோளை நோக்கி தொடர்ந்து பாடுபடுகிறவர்களே உண்மையான சாதனையாளர்கள். எந்த சூழலும் தன்னை தளரச் செய்ய முடியாது மன உறுதியுடன் போராடி வெற்றியின் உச்சியைத் தொட்ட ஒருவரின் வாழ்க்கைப் பயணம் இதோ உங்கள் முன்.

**Satender Singh இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலம், அம்ரோஹா மாவட்டத்தில் உள்ள ஒரு எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். ஒன்றரை வயதில் நிமோனியாவால் பாதிக்கப்பட்ட அவர், தவறான மருந்தளிப்பின் காரணமாக முழு பார்வையையும் இழந்தார். பார்வையின்றி வளர்ந்தாலும் தன்னம்பிக்கையை இழக்காமல் பல சவால்களை எதிர்கொண்டார். பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளியில் Braille முறையில் கல்வி கற்று, பள்ளிப் படிப்பில் சிறந்த மாணவராகத் திகழ்ந்தார்.**






**Satender Singh** இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலம், அம்ரோஹா மாவட்டத்தில் உள்ள ஒரு எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். ஒன்றரை வயதில் நிமோனியாவால் பாதிக்கப்பட்ட அவர், தவறான மருந்தளிப்பின் காரணமாக முழு பார்வையையும் இழந்தார். பார்வையின்றி வளர்ந்தாலும் தன்னம்பிக்கையை இழக்காமல் பல சவால்களை எதிர்கொண்டார். பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளியில் **Braille** முறையில் கல்வி கற்று, பள்ளிப் படிப்பில் சிறந்த மாணவராகத் திகழ்ந்தார்.

டெல்லி ஸ்டீபன்ஸ் கல்லூரியில் சேர்ந்தபோது ஆங்கிலத்தில் படிப்பது அவருக்கு பெரும் சவாலாக இருந்தது. ஆனால் மனம் தளராமல் ஒரு ஆண்டுக்குள் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றார். பின்னர் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் **M.Phil** பட்டம் பெற்றார்.

ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோதும் **UPSC** சிவில் சர்வீஸ் தேர்வை இலக்காகக் கொண்டு தயாரானார். பார்வையற்றவராக இருந்ததால் **Screen Reader** மென்பொருளை பயன்படுத்தி படித்தார். 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் தோல்வி கண்டபோதும் மனம் சோராமல் 2018 ஆம் ஆண்டு மீண்டும் முயற்சி செய்து **714th Rank (All Over India)** பெற்றார்; இன்று ஒரு உண்மையான சாதனையாளராக திகழ்கிறார்.








**இதை வாசிக்கும் நண்பர்களே, "எனக்கு முடியாது" என்ற எண்ணத்தை Satender Singh ஏற்கவில்லை; அதற்குப் பதிலாக "எப்படி முடியும்?" என்ற கேள்வியைத் தேர்ந்தெடுத்தார். பார்வையற்றவராக இருந்தும் கல்வியில் கவனம் செலுத்தி, மொழியை கற்றுக்கொண்டு, கடினமான தேர்வை வென்றார். அதுபோல நீங்களும் தடைகளை காரணம் காட்டாமல் தொடர்ந்து முயற்சி செய்யுங்கள்; வெற்றி தாமதமாகலாம், ஆனால் உழைப்பு ஒருபோதும் வீணாகாது. முயலுங்கள் — முடித்துக் காட்டுங்கள்!**

UPSC

## UPSC பயிற்சி வகுப்பு (2026–2027)

**இயேசு விடுவிக்கிறார் மற்றும் புதுவாழ்வு சங்கம் இணைந்து நடத்தும்**

# DANIEL CIVIL SERVICE COACHING PROGRAM

- ஒரு ஆண்டு முழுமையான பயிற்சி: மே 2026 முதல் மார்ச் 2027 வரை
- பள்ளி (8ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு)
- மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான (2026-2027)
- IAS, IPS தேர்வுக்கான சிறப்பு பயிற்சி.
- வாரத்தில் 3 நாட்கள் (புதன், சனி & ஞாயிறு) ஆன்லைன் வகுப்புகள் நடைபெறும்.
- மிகக் குறைந்த கட்டணத்தில் தரமான பயிற்சி வழங்கப்படும்.











தொடர்புக்கு : 9488475315 / 8778443617



நிகழ்வு: ஜெனிபர்

# அழுத்தத்தின் கீழ்!!

*Hi friends,*

**எல்லாரும் எப்படி இருக்கீங்க? அழுத்தத்தின் கீழ் என்னும் இத்தொடரில் உங்களை மீண்டும் சந்திப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்!**

**கடந்த மாதம் எப்படி ஆலிவ் விதைகள், "அழுத்தத்தின் கீழ்" எப்படி மிகவும் பிரயோஜனமான ஆலிவ் எண்ணெயாக உருவாக்கப்பட்டது எனப் பார்த்தோம்.**

**இந்த மாதம் நாம் எதைப் பற்றிப் பார்க்கப் போகிறோம்? Any idea? Friends**

**எல்லா பக்கமும் கதவுகள் பூட்டப்பட்டதை போல், விடையே தெரியாத அழுத்தமான சூழ்நிலைகளை நீங்கள் face பண்ணி இருக்கீங்களா? அப்படியானால், இந்தத் தொடர் உங்களுக்குத் தான். சரி வாங்க தொடருக்குள் போகலாம்.**

## இந்த மாதம் கோதுமை மணியைப் பற்றித் தான் நாம் பார்க்கப் போகிறோம்.

பொதுவாகக் கோதுமை மணிகள், கோதுமை பயிரினுடைய தண்டோடு ஒட்டிக் கொண்டிருக்கும். ரொம்ப **Comfortable** ஆ கஷ்டமே இல்லாமல் தன் உணவு, நீர் எல்லாவற்றிற்கும் தண்டையே சார்ந்து இருக்கும். நாமும் ஒரு சிலர் அப்படித்தானே சில விஷயங்களில் மற்றவர்களைச் சார்ந்து இருக்கிறோம்.

சரி... ஆனால் அந்தக் கோதுமை மணி தண்டோடே ஒட்டிக்கொண்டிருந்தால் அது ஒரு விதையாக மட்டும் தான் வாழ்நாள் முழுவதையும் கழிக்க இருக்க முடியும். ஒன்று அது அப்படியே அழுகிப்போகும் அல்லது ஏதாவது மிருகங்கள் அதைச் சாப்பிட்டுவிடும்.

ஆனால், ஒரு கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும் என்று யோவான் 12:24 சொல்லுகிறது.

ஆமாங்க, அது மிகுந்த பலனைக் கொடுக்க வேண்டுமானால் சாக வேண்டும், அதாவது அழுத்தம் நிறைந்த சூழலுக்குள்ளாகச் செல்ல வேண்டும். தனக்கு சாதகமான, பாதுகாப்பான

பிடித்த சூழலில் இருந்து வெளியே வர வேண்டும். சாக வேண்டும் என்றால் அப்படியே மடிந்து போவது என்று அர்த்தம் அல்ல; வாழ்வதற்காகச் சாக வேண்டும். ஒரு தானிய விதை ''ஏராளமான அறுவடையை'' கொடுக்க வேண்டுமானால் ''தரையில் விழுந்து இறக்க வேண்டும்''.

முதலாவது கோதுமை, பயிரின் தண்டோடே ஒட்டி இருக்கும். அந்தக் கோதுமை விதைகளைத் தண்டிலிருந்து பிரித்தெடுத்து, அதைச் சேமித்து வைப்பர். இவ்வளவு நாளாகத் தான் சார்ந்திருந்த தண்டை விட்டுப் பிரிக்கப்பட்ட கோதுமை மணியின் கதி தான் என்ன? இது கடினமான சூழல் தானே friends.

நீங்களும் கூட இவ்வளவு நாளாக யாரை சார்ந்து இருந்தீர்களோ, அவர்களை விட்டுப் பிரிக்கப்பட்டு, உதவியே இல்லாத சூழலில் இருக்கிறீர்களா? கவலைப்படாதீங்க! நீங்கள் பிரிக்கப்பட்டீர்கள் என்றால், தேவன் அது நன்மைக்காகவே பிரித்திருக்கிறார் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**பிரித்தெடுக்கப்பட்ட கோதுமை மணியின் நிலையைப் பார்ப்பதற்கு முன். கோதுமை விதையின் அமைப்பை இந்த மாதம் பார்க்கலாமா?**

விதை உறை (Seed Coat) | கரு (Embryo) | விதையிலை (Cotyledon) | கருவூண் திசு (Endosperm



விதை உறை: விதையை மூடி பாதுகாக்கும் வெளிப்புற அடுக்கு

கரு: புதிய தாவரமாக வளரும் திறன் கொண்ட, முதிர்ச்சியடையாத தாவரப்பகுதி. எதிர்கால வேர், எதிர்கால தளிர்.

விதையிலை: கருவிற்குத் தேவையான உணவைச் சேமித்து வைக்கும் பகுதி

கருவூண் திசு: சில விதைகளில் கருவிற்கு ஊட்டமளிக்கும் உணவுச் சேமிப்புத் திசு.

இவைகளே விதையின் அமைப்பு. இவைகள், கோதுமை மணி தண்டோடு சேர்ந்திருக்கும் போது செயலற்ற நிலையில் இருக்கும். அதாவது ஒரு நல்ல எதிர்காலத்திற்கான செயல்பாடுகள் அனைத்தும் முடக்கப்பட்டவையாகவே இருக்கும்.

பிரித்தெடுக்கப்பட்ட கோதுமை மணியின் நிலையைப் பற்றி அடுத்த மாதம் பார்க்கலாம்...

ஜெபக் கையேடு – ஏப்ரல் 2026

# ஜெபிக்கலாம் வாங்க!!

Jebikalam Vanga

ஜெபம் : வெனிட்டா



தாலிபான்கள் ஆப்கானிஸ்தானை கைப்பற்றியதற்கு பின்னர், அந்த நாட்டின் 97% மக்கள் பசி மற்றும் கடுமையான உணவுப் பற்றாக் குறையால் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. வேலையின்மை அதிகரித்திருப்பதும் இந்த உணவு நெருக்கடியை மேலும் மோசமாக்கியுள்ளது. ஒரு தேசம் முழுவதும் அடுத்த வேளை உணவிற்கே வழியின்றி மக்கள் தவிக்கும் துயர்நிலை நிலவுகிறது. தீவிரவாத ஆட்சியின் கட்டுப்பாட்டில் சிக்கித் தவிக்கும் ஆப்கானிஸ்தான் தேசம் அமைதி உண்டாக **ஜெபிப்போம்.**




இந்தியாவில் தினமும் சராசரியாக 80 கொலை வழக்கும் ஒரு ஆண்டில் 29 ஆயிரத்து 193 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும், அதிகபட்சமான கொலை வழக்குகள் உத்திரப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் NCRB தெரிவித்துள்ளது. 30-45 வயதுக்குட்பட்டவர்களில் 38.5 சதவீதம் பேரும், 18-30 வயதுக்குட்பட்டவர்களில், 35.9 சதவீதம் பேரும், 45 வயதிற்கு மேற்பட்டவர்களில் 25.6 சதவீதம் பேரும் கொல்லப்பட்டுள்ளதால், நம் தேசத்தின் இளவயதினர் மத்தியில் தற்கொலைகள் மட்டுமல்லாமல், கொலை சம்பவங்களும் அதிகரித்துள்ளன. நம் தேசத்தில் காணப்படும் இந்த துயரநிலை மாறிட **ஜெபிப்போம்.**



அதிக லாபம் பெற வேண்டும் என்ற நோக்கில், குறைந்த செலவில் கலப்பட உணவுப் பொருட்களை தயாரிப்பவர்களுடன் கூட்டுச் சேர்ந்து செயல்படும் பணமுதலைகள், அரசியல் தலைவர்கள், அரசு அதிகாரிகளின் பொறுப்பின்மையும், அரசாங்கத்தின் கவனக்குறைவும், அதிகாரிகளின் மெத்தனப்போக்கும் காரணமாக மக்கள் பாதிக்கப்படுகின்றனர். சுகாதாரமற்ற உணவை உட்கொள்வதால் உலகளவில் ஆண்டுதோறும் 550 மில்லியன் மக்கள் நோய்களுக்கு உள்ளாகின்றனர். அதில் 2,30,000 பேர் உயிரிழக்கின்றனர். மேலும் 33 மில்லியன் மக்கள் ஆரோக்கியமான வாழ்க்கையை இழக்கும் நிலை உருவாகியுள்ளது. இந்த துயரமான நிலை மாறவும், பொறுப்புணர்வு ஏற்படவும், மக்கள் பாதுகாப்பாக வாழும் சூழல் உருவாகவும் நாம் **ஜெபிப்போம்.**



நம் தேசத்தில் நெருப்பின் நிமித்தமாக எந்தவொரு உயிரிழப்புகளும் ஏற்படாதபடிக்கும், ஜனங்களுடைய வாழ்வாதாரம் பாதுகாக்கப்படவும், தொழிற்சாலைகள், அடுக்குமாடிக் குடியிருப்புகள், எண்ணெய்க் கிடங்குகள், பள்ளி, கல்லூரிகள் மற்றும் வாகனங்களையும் கர்த்தருடைய பாதுகாப்பின் கரத்தில் ஒப்புக்கொடுத்து ஆபத்துகளுக்கு விலக்கிப் பாதுகாத்துக்கொள்ள **ஜெபிப்போம்.**



நெருப்பினால் திரளான பாதிப்புகளைக் கொண்டு வந்து நம் தேசங்களின் சமாதானத்தை அற்றுப்போகப் பண்ணவும், இதனிமித்தமாக ஜனங்களின் இருதயத்தில் பயத்தையும் திகிலையும் கொண்டு வரும்படி போராடுகிற சத்துருவின் திட்டங்கள் நிர்மூலமாக்கப்படவும், ஜனங்களின் இரத்தத்தை சிந்தப்பண்ணி, கர்த்தருடைய கோபம் பட்டணத்தின் மேல் கடந்து வரும்படிக்கு போராடுகிற சாத்தானின் கிரியைகள் முற்றிலும் அழிக்கப்பட **ஜெபிப்போம்.**



தமிழகத்தில் சிறார் குற்றச் செயல்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன என்பது மிகுந்த கவலைக்குரியது. 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற 1,603 கொலை வழக்குகளில் 48 (3%) வழக்குகளில் சிறார்கள் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டனர். இது 2022 இல் 3.4%, 2023 இல் 4.8%, 2024 இல் 5.3% மற்றும் 2025 இல் 6.1% ஆக உயர்ந்துள்ளது. மேலும், 2025 ஆம் ஆண்டு 1,661 கொலை வழக்குகளில் 104 (6.3%) வழக்குகளில் சிறார்கள் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்; இது கடந்த ஆண்டுகளை ஒப்பிடுகையில் 2 மடங்கு அளவிற்கு உயர்வைக் காட்டுகிறது. இந்த அவலநிலை முற்றிலும் நீங்கி, சிறார்கள் நல்ல பாதையில் வழிநடத்தப்பட நாம் ஊக்கத்துடன் **ஜெபிப்போம்.**



ஆப்பிரிக்க நாடுகளான எத்தியோப்பியா, காங்கோ, நைஜீரியா மட்டுமின்றி, நம் அண்டை நாடுகளான பாகிஸ்தான் மற்றும் வங்கதேசத்தை விடவும், இந்தியாவில் பட்டினியால் வாடும் மக்களின் சதவிகிதம் அதிகமாக இருப்பது அதிர்ச்சியளிக்கும் உண்மையாகும். குறிப்பாக, இந்திய குழந்தைகளில் 19.3% (சுமார் 67 லட்சம் குழந்தைகள்) போதிய உணவின்றி பட்டினியால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு வேளை உணவுக்குக் கூட வழியின்றி தவிக்கும் இந்த குழந்தைகளுக்கு தேவையான சத்தான உணவு கிடைக்கவும், அவர்களின் வாழ்க்கை பாதுகாக்கப்படவும் நாம் **ஜெபிப்போம்.**

# பாடுகள் மத்தியில்...



ஆஸ்திரேலியாவிலிருந்து மிஷனெரியாக ஒரிசாவிற்கு வந்து, குஷ்டரோகிகளுக்கும், சமுதாயத்தில் துச்சமாக எண்ணப்பட்டவர்களுக்கும் நடுவில் தங்கி, தன் வாழ்க்கையையே அர்ப்பணித்து கிறிஸ்துவின் அன்பை செயலால் வெளிப்படுத்திய கிரஹாம் ஸ்டெயின்ஸ் அவர்களின் அற்புதமான ஊழிய தரிசனத்தை குறித்து இந்த மாதம் நாம் பார்க்கப் போகிறோம். அவரது சேவை ஒரு சாதாரண மிஷன் வேலை அல்ல — அது அன்பின் சாட்சியம், தியாகத்தின் அடையாளம், விசுவாசத்தின் உச்சம்.

கிரஹாம் ஸ்லூவர்ட் ஸ்டெயின்ஸ் ஆஸ்திரேலியாவை சேர்ந்த வில்லியம் ஸ்டெயின்ஸ் மற்றும் எலிசபெத் தம்பதியினரின் இரண்டாவது மகன். அவருக்குப் பதினைந்து வயதாக இருந்தபோது, ஒரு மிஷனெரி இந்தியாவில் உள்ள தொழுநோயாளிகளின் அவலநிலையை பற்றிப் பேசி, புகைப்படங்களைக் காட்டினபோது, திகைத்துப்போன ஸ்டெயின்ஸ், இந்தியாவில் தொழு நோயாளிகளிடையே சேவை செய்வதற்காகத் தனது வாழ்க்கையை அர்ப்பணிக்க முடிவு செய்தார். அதன்பிறகு, மிஷனெரி ஊழியம் குறித்த ஒரு கூட்டத்தில் கலந்துகொண்டு, மிஷனெரி ஊழியத்திற்கான கர்த்தரின் அழைப்பின் நிச்சயத்தை பெற்றுக்கொண்டார்.

அழைப்பினை பெற்றுக்கொண்ட கிரஹாம் ஸ்டெயின்ஸ் 'இவாஞ்சலிகல் மிஷனெரி சொசைட்டி ஆப் மயூர்பஞ்ச்'-யில் சேர்ந்து, இந்திய மாநிலமான ஒடிசாவின் பழங்குடிப் பகுதிகளில் பணியாற்ற 1965ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்து, தொழுநோயால் பாதிக்கப்பட்ட மக்களின் துன்பமான நிலையைப் பார்த்த அவர், அன்பு மற்றும் அர்ப்பணிப்புடனும், தொழுநோயாளிகளிடையே சேவை செய்யத் தொடங்கினார். ஒடியா மொழியையும், சந்தாலி என்ற உள்ளூர் பேச்சுவழக்கத்தையும் சிறப்பாகக் கற்றுக்கொண்ட பிறகு, இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அங்குள்ள பழங்குடியினருக்குப் பிரசங்கித்தார்.

1983ஆம் ஆண்டில் பாரிபாடாவில் இருந்த **Mission** நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டார். அதே ஆண்டில் கிளாடிஸ் என்ற ஒரு மிஷனெரி செவிலியரை அவர் மணந்தார். கிளாடிஸ் தன் கணவரான கிரஹாம்க்கு ஒரு பொருத்தமான மனைவியாகவும், ஊழியத்தில் ஒரு நல்ல தோழியாகவும் இருந்தார். அந்தத் தம்பதியினர் இருவரும் சேர்ந்து கல்வி, மருத்துவ சேவைகள் மற்றும் சமூக வளர்ச்சி ஆகியவற்றை அந்தப் பழங்குடி மக்களுக்கு வழங்க அயராது உழைத்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தார்கள். இதைக்கண்ட மதவாதிகள் சதி திட்டங்களைத் தீட்டி ஜனவரி 22, 1999 இரவு, ஸ்டெயின்ஸ் தனது இரண்டு மகன்களுடன் மனோகர்பூரில் நடந்த ஒரு கூட்டத்திலிருந்து திரும்பி வரும்போது, அவர்களைக் கோடாரியால் தாக்கி, வாகனத்திற்குள் அடைத்து, வாகனத்துக்குத் தீ வைத்து, மூவரையும் உயிருடன் எரித்தனர். இப்படி அந்த மிஷனெரி குடும்பம் கஷ்டங்களையும் துன்புறுத்தல்களையும் எதிர்கொண்டதின் பலனாக, பல ஆண்டுகளாகச் சுவிசேஷத்தை நிராகரித்த பலர் இயேசு கிறிஸ்துவிடம் வர ஆரம்பித்தார்கள்.



## கிரஹாம் ஸ்டெயின்ஸ் அவர்களின் ஊழியங்கள்:

**தொழுநோய் இல்லம் (Leprosy Home):** 1982ஆம் ஆண்டில் மயூர்பஞ்ச் பகுதியில் உள்ள தொழுநோயாளிகளுக்கு மருத்துவ உதவி, மறுவாழ்வு மற்றும் ஆதரவை வழங்கினார்.



**பழங்குடியின மக்களுக்கான கல்வி:** ஒடிசாவின் தொலைதூரக் கிராமங்களில் வாழ்ந்த பழங்குடியின மக்களுக்குக் கல்வி மற்றும் அடிப்படை சுகாதார வசதிகள் சென்றடையச் செய்தார்.

**சமூக சேவை:** ஏழ்மையில் வாடிய மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உழைத்தார்.

**ஸ்டெயின்ஸ் மெமோரியல் மருத்துவமனை:**

கணவரின் மறைவிற்குப் பிறகு, கிரஹாமின் மனைவியாகிய கிளாடிஸ் 2004-ல் ராஜபாசாவில் 15 படுக்கைகள் கொண்ட இந்த மருத்துவமனையை உருவாக்கி, ஏழை நோயாளிகளுக்கு மருத்துவ உதவி வழங்கினார்.

**கல்வி மற்றும் தங்கும் விடுதி:**

ஏழை மாணவர்களின் சமூக மேம்பாட்டிற்காக, குறிப்பாகத் தொழுநோய் பின்னணி கொண்ட மாணவர்களுக்குக் கல்வி மற்றும் தங்குமிடம் வழங்கும் தீமோத்தேயு, பிலிப்பு மெமோரியல் விடுதியை 2003-ல் நிறுவினார். தனது குடும்பத்தினரை இழந்த போதிலும், கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்திருந்த வேலையை நிறைவேற்றக் கிளாடிஸ் தனது மகளோடு 2004ஆம் ஆண்டுவரை இந்தியாவிலேயே இருந்தார். 2004-ல் ஆஸ்திரேலியா திரும்பியபோதிலும், அவரது தியாகம் மற்றும் சேவையின் நினைவாக இன்றும் அப்பகுதியில் மருத்துவப் பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

அன்பான வாலிபர் உலகம் சந்தாதாரர்களுக்கு இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். நமது வாலிபர் உலகம் மாதாந்திர பத்திரிக்கையின் மூலம் நீங்களும் உங்களைப்போன்ற அநேக வாலிபர்களும் பயனடைந்து வருவதை நினைத்து தேவனை துதிக்கிறோம். இப்புத்தகத்தின் மூலம் நீங்க தொடர்ந்து பயன்பெற நாங்கள் விரும்புகிறோம். உங்கள் சந்தா காலம் நிறைவடைய இருப்பின், தயவுசெய்து உடனடியாக புதுப்பித்து கொள்ளவும்; மேலும் வாலிபர் ஊழியத்தை ஆதரிக்க விரும்பினால், கீழே வழங்கப்பட்டுள்ள வங்கி கணக்கு அல்லது QR குறியீட்டை பயன்படுத்தலாம்.








## Bank detail

| | |
|---|---|
| A/C name | : JESUS REDEEMS YOUTH MINISTRY |
| A/C no | : 054100710400515 |
| Bank | : TAMILNAD MERCANTILE BANK LTD., |
| Branch code | : 000054 |
| IFS Code | : TMBL0000054 |
| MICR code | : 627060021 |
| SWIFET code | : TMBLINBBTUT |




வாலிபர் உலகம் பத்திரிக்கைக்கான சந்தா தொகை அல்லது காணிக்கை செலுத்திய பின், 9750955547 என்ற எண்ணிற்கு உங்கள் விவரங்களைத் தகவலாக அனுப்பி உறுதிப்படுத்தவும்.

| சந்தா விவரங்கள்: | 1 ஆண்டுக்கு ரூ. 100/- | 13 ஆண்டுகளுக்கு ரூ. 1000/- |
|---|---|---|

"வாலிபர் உலகம்" மாதாந்திர பத்திரிக்கை தமிழ், ஆங்கிலம், மலையாளம், இந்தி ஆகிய மொழிகளில் வெளியிடப்படுகிறது. உங்களுக்கு தேவையான மொழியைத் தெளிவாகக் குறிப்பிட்டு தெரிவிக்கவும்.

# கடைசி கால அடையாளங்கள்.



## காலத்தின் குரல்:

## நிறைவேறும் தீர்க்கதரிசனங்கள்;

பூமி முழுவதும் யுத்தங்கள், பஞ்சங்கள், கொள்ளை நோய்கள், நிலநடுக்கங்கள் மற்றும் கள்ளக்கிறிஸ்துக்கள் எழும்புவார்கள் என்று வேதாகமம் எச்சரிக்கிறது. பாவம் பெருகி, அன்பு தணிந்து, மனிதர்களின் இருதயம் கடினமடையும் என்றும் அறிவுறுத்துகிறது. மக்கள் சுயநலவாதிகளாகவும், பரியாசக்காரர்களாகவும், பணப்பிரியர்களாகவும் மாறுவார்கள் என்றும் வேதவசனம் தெளிவுபடுத்துகிறது.

## நடைபெற்றுக்கொண்டிருக்கும் அடையாளங்கள்:

- **யுத்தங்கள் மற்றும் கலவரங்கள்**: தேசத்திற்கு விரோதமாகத் தேசமும், ஜனத்திற்கு விரோதமாக ஜனமும் எழும் நிலை அதிகரித்து வருகிறது.
- **இயற்கை சீற்றங்கள்**: பல பகுதிகளில் பஞ்சங்கள், கொள்ளை நோய்கள் மற்றும் கடுமையான நிலநடுக்கங்கள் நிகழ்ந்து வருகின்றன.
- **அன்பு தணிதல்**: அக்கிரமம் பெருகுவதால், குடும்ப உறவுகளில்கூட அன்பு மங்கிக் கொண்டிருக்கிறது.
- **பரியாசக்காரர்கள் எழுச்சி**: தேவனை மறுத்து, தங்கள் சுயஇச்சைப்படி வாழும் மக்கள் அதிகரித்து வருகின்றனர்.
- **கள்ளத்தீர்க்கதரிசிகள்**: தங்களை கிறிஸ்து எனக் கூறிக் கொண்டு பலரை தவறாக வழிநடத்தும் கள்ளத்தீர்க்கதரிசிகள் எழும்பிக் கொண்டிருக்கிறார்கள்..
- **சுவிசேஷப் பிரசங்கம்**: ஆண்டவராகிய இயேசுவின் வருகைக்கு முன், உலகின் சகல ஜனங்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்படும்.

மேற்கண்ட அனைத்தும் இந்நாட்களில் நம் கண்முன்னே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. பரிசுத்த வேதாகமத்தில் ஆண்டவர் உரைத்த வேதவசனங்கள் நிறைவேறும் காலப்பகுதியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆகையால், எச்சரிக்கையுடனும் விழிப்புடனும், விசுவாசத்தில் நிலைத்திருப்போமாக..!

# IGNITERS
## Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில்
அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள்
தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது.
நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக்
கொண்டு, பிறரையும் பெலப்படுத்த

**ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!**

### EVERY 1st SUNDAY (5th APRIL)

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre,
Ajantha Mahal,
# 3, 6th West Cross Road,
Gandhi Nagar
9442885315 | 9442979556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442885315

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor,
Tiruchendur Road,
Muniasamypuram
Land mark: South Police Station to Kamaraj College Rd.
9750955548 | 9786212103

**TIRUPATI (3PM)**
World Revival Prayer Centre,
Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

### EVERY 2nd SUNDAY (12th APRIL)

**BANGALORE (3PM-5PM)**
World Revival Prayer Centre,
57/2 Thomasappa layout (Opp)
Lumbini Garden Bus Stand Outer Ring Road, Veerannapalaya
(Nagavara)
9791444788 | 080 35 45 45

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

**Mulund (5PM - 7:30PM)**
Shekinah NLA Church,
Vijay Nagar, Near Vani Vidyalaya School, Mulund-West
9004882470

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

**KOVILPATTI (2:30PM -5:30PM)**
St. Paul's Matriculation School
(Parking area Building)
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
D. No. 5/2, Vaanjinathan Street,
North side of TPV Mill,
Thuththikulam Road,
9750955548 | 9965377427

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
#203, Madurai Road,
Opp. Anantham Silk, Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:00PM)**
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

**CHENGALPET (3PM – 5:30PM)**
Reheboth Church,
Near old bus stand,
9710809626 |9488475315

**NAMAKKAL (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
16B Naveen Nest Apartment,
Podhigai Nagar,
1st street, Salem Road,
Namakkal-637001
9962085523 | 94886 18305

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Grace Auto,
1st floor, 163, Raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles,
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

## EVERY 3rd SATURDAY (18th APRIL)

**MYSORE (3:30PM - 6PM)**
World Revival Prayer Center,
3818, 14th Cross,
St. Mary's Road,
FTS Circle, N.R. Mohalla.
9962085523 | 9886311777

## EVERY 3rd SUNDAY (19th APRIL)

**SALEM (3PM - 6PM)**
Karunya Prayer Hall,
76/67, Near Thinathanthi office,
opp. Gandhi Stadium, Arisipalayam
9962085523

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex,
#43/R4, Rajendra Nagar,
Trivandrum Road
9750955548 | 9047480484

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex,
1st Floor, P K N Road,
(Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor,
Arts College Road,
Near Charan Tower,
9894399599 | 9442885315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor,
Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

**CHENNAI (3 PM)**
World Revival Prayer Centre,
Prince Kushal Towers,
7th Floor B-Wing,
Adjacent to LIC Metro,
Mount Road,
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9750955548

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram, Kadaiyam (via),
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1S.A. Rice Mill Complex,
TTP Main Rd,
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station Road,
Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9750955548

**PONDICHERRY (5PM TO 7PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9962085523

**CHITTOOR (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

**DELHI (3 PM TO 5 PM)**
World Revival Prayer Centre,
Plot 152, Pratap Nagar
Near Hari Nagar bus depot
New Delhi - 110064
7217663240

## EVERY 4th SUNDAY (26th APRIL)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar, Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor,
305/E, Mith Chauky,
Marve Road, Malad (W)
9664050567 | 9619996976

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre, VK Road.
9442885315

**THISAYANVILAI (2:30PM - 5:30PM)**
World Revival Prayer Centre,
Near ML Hospital, Thisayanvilai.
9487810845 | 9750955548

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop] 41, K.Salai pudur
Byepass Road, Madurai
9750955548

**உங்கள் பகுதியில் நடைபெறும் Fellowshipல் தவறாமல் கலந்து கொள்ளுங்கள்; எழுப்புதலைப் பற்ற வைப்போர்களாய் மாறுங்கள்!**

# செய்திகள்!

## இந்தியாவில் 2030ம் ஆண்டில் தண்ணீர் பற்றாக்குறை அபாயம்:

## உணவு உற்பத்திக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்; சர்வதேச நீர் மேலாண்மை நிறுவனம் அதிர்ச்சி தகவல்!

உலக தட்பவெப்ப மாற்றம், உள்நாட்டு மக்கள் தொகை பெருக்கம் போன்ற காரணங்களால் இந்தியா தண்ணீர் பற்றாக்குறையை சந்திக்கும். இது அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய மற்றும் எதிர்பாராத அளவிற்கு உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலையை ஏற்படுத்தும். இந்தியாவிற்கு 700 பில்லியன் கியூபிக் மீட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. இதில் 85% உணவு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், இந்தத் தேவை, 2030ம் ஆண்டில் மக்கள் தொகை அதிகரிப்பால் இரண்டு மடங்காக அதிகரிக்கும். அதாவது 2030ம் ஆண்டில் இந்தியாவின் மக்கள் தொகை 160 கோடியில் இருந்து 170 கோடிவரை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

அப்போது தண்ணீர் தேவையும் இரு மடங்கு (அதாவது 1,498 பில்லியன் கியூபிக் லிட்டர்) அதிகரிக்கும். தேவையில் பாதியளவே கிடைக்கும் என்பதால் நிச்சயமாகத் தண்ணீர் பற்றாக்குறை என்பது தலையாய பிரச்னையாக உருவெடுக்க அதிக வாய்ப்புகள் உள்ளது என்றும் அந்த ஆய்வுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகள், தற்போது தண்ணீர் நெருக்கடி நாடுகளாக உள்ளது என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்று. இந்தியாவின் நிலத்தடி நீர்மட்டம், பெரும்பாலான பகுதிகளில் அதல பாதாளத்திற்கு சென்று விட்டது.

வடக்கில் உள்ள விவசாயிகள் நிலத்தடி நீரை ஏற்கனவே அதிகளவில் பயன்படுத்தி விட்டதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளன. அதிகளவில் விவசாயத்தை நம்பியுள்ள நாடுகளில், இந்தியா முதலிடத்தில் உள்ளது. இதற்குப் பெரும் ஆதாரமாக இருப்பது தண்ணீர். இந்தியாவின் தண்ணீர் தேவை தற்போது 634 பில்லியன் கியூபிக் லிட்டராக உள்ளது.

2030ம் ஆண்டுக்குள் இது 1,123 பில்லியன் கியூபிக் லிட்டராக அதிகரிக்கும் என்று ஒன்றிய நீர்வள கமிஷன் கணித்துள்ளது. தண்ணீருக்கு பற்றாக்குறை ஏற்படும்போது,



விவசாயம் பெருமளவில் பாதிக்கும். விவசாயம் பாதிக்கும்போது, உணவுப்பொருட்கள் தட்டுப்பாடும் ஏற்படும் என்பது இயல்பான ஒன்று. இப்படி உணவுப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் தருணத்தில், நாம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தே ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தமும் ஏற்படும். நாம் வாழும் பூமி 70 சதவீதம் நீரால் நிறைந்துள்ளது. அதில் மூன்றில் இரண்டு பங்கு நீரானது உறைந்த பனிப்பாறைகள் மற்றும் நம் பயன்பாட்டிற்கு கிடைக்காத இடங்களில் உள்ளது. மொத்த நீரில் 3 சதவீதம் மட்டுமே நன்னீராக உள்ளது. இதன் காரணமாகவே, உலகளவில் சுமார் 1.1 பில்லியன் மக்கள் தண்ணீர் இல்லாமல் தவிக்கின்றனர். ஆண்டு தோறும் 2.7 பில்லியன் மக்கள், ஆண்டுக்கு ஒரு மாதமாவது போதிய தண்ணீர் இல்லாமல் தவிக்கின்றனர். இதனால் சுகாதாரம் சார்ந்த பிரச்னைகளையும் அவர்கள் எதிர்கொள்கின்றனர். சுற்றுச்சூழலை செழிப்பாக்கவும், மக்களுக்கு உணவளிக்கவும் பயன்பட்டு வந்த 50 சதவீதம் நீர்நிலைகள், இப்போது தண்ணீரின்றி வெறிச்சோடி கிடக்கின்றன என்பது போன்ற பல்வேறு தகவல்களையும் ஆய்வுகள் வெளியிட்டுள்ளன.

- மார்க் ஒ. தினகரன்.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

# வாலிபர் எழுப்புதல் கூடுகை

## Youth Revival Meeting 2026



**In Pune ஏப்ரல் 11** சனிக்கிழமை

காலை 9 முதல் மாலை 5 வரை

இடம்: Jyothiba Mangal Karyalay Hedgewar Path,
Pimpri to Kalewadi main Road,
Kalewadi, Pimpri-Chinchwad, Pune

Registration Fees Rs.100/-

Message:

Bro. **Avinash**, Pastor **Sunil Gangawane**

Contact: 90048 82470 | 95273 33415

## திருவாடானை தாலுகா - கைகாட்டியில்...

**மே 1** வெள்ளி

காலை 10 முதல் மாலை 4 வரை

இடம்: வானத்தின் வாசல், வாட்டர் டேங்க் அருகில்,
மதுரை ரோடு, C.K மங்கலம், கைகாட்டி

தொடர்புக்கு:

97509 55548, 97159 48404



## நாகர்கோவிலில்...

**மே 16** (சனிக்கிழமை)

இடம்: ஆனந்தம் பீவி மஹால் ஆட்சியர் அலுவலகம் அருகில்,
கே.பி ரோடு, சிதம்பரநாதன் தெரு, நாகர்கோவில்

தொடர்புக்கு: 97509 55548

## திருநெல்வேலியில்...

**மே 17** ஞாயிற்று கிழமை

மாலை 3 மணி முதல் 6 மணிவரை

இடம்: பின்னர் அறிவிக்கப்படும்

செய்தியும் ஜெபமும்:

**சகோ. அவினாஷ்**

தொடர்புக்கு: 97509 55548

Registered under the press and
Registration of Periodicals Act, 2023: TNBIL/2010/32847



# ஆசீர்வாத பெருவிழாக்கள்!

## வாலிபர் பெருவிழா!

## மே 25 - 29

திங்கள் முதல் வெள்ளி

நேரம்:
காலை 9 மணி முதல் 12 மணிவரை

இடம்: ஏலிம் கார்டன்
யெகோவா ஷாலோம் ஹால், நாலுமாவடி,

வாலிபர்களுக்கென்று பிரத்யேகமாக நடைபெறும்.
இக்கூடுகையில் வாலிபர்கள் தவறாமல் கலந்து கொள்ள
அன்புடன் அழைக்கிறோம்.